# நித்திலம்



அமரர் தர்மானந்தசிவம் நித்திலன்

அவர்களின்

# நினைவு மலர்

28-07-2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நித்திலம்



யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## தர்மானந்தசிவம் நித்திலன்

அவர்களின்

# 45ம் நாள் நினைவு மலர்

## 28-07-2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்

குடும்ப விருட்சத்தின் வேராகி

அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்

சிறப்புடன் வாழ்ந்திருந்து

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி

மீளாத் துயில் கொண்ட

எங்கள் அன்புச் செல்வத்தின்

திடீர் பிரிவால் துயருறும் நாம்

உங்களின் பொன்னடித் தாமரைகளில்


இம்மலரை காணிக்கையாய்

சமர்ப்பிக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அமரர் தர்மானந்தசிவம் நித்திலன்

மண்ணில்
24-01-2000

விண்ணில்
14-06-2019

## திதி வெண்பா

ஆண்டு விகாரி வைகாசி முப்பத்து ஒன்றில்
பூண்ட பூர்வபக்க துவாதசியியில் - வேண்டு புகழ்
தர்மானந்தசிவம் நித்திலன் பூவுலகு நீங்கி
மீண்டுவரா வுலகடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரத்திரட்டு



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

வாக்குண்டாம் நல்லமனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்று அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூறாயிரங் கூறிட்(டு)
அத்திலங் கொருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேத்தரத்தானே.

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்ற(ம்) முற்றும்
எமக்கமுதானம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார் அடிதாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகவென உரைப்பார்.

## திருப்புகழ்

**கைத்தல நிறைகனி யப்பமோ டவல்பொரி**
**கப்பிய கரிமுகன் அடிபேணிக்**
**கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ**
**கற்பக மெனவினை கடிதேகும்**
**மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்**
**மற்பொரு திரள்புய மதயானை**
**மத்தள வயிறனை உத்தமி புதல்வனை**
**மட்டவிழ் மலர்கொடு பணிவேனே**
**முத்தமிழ் அடைவினை முற்படு கிரி தனில்**
**முற்பட எழுதிய முதல்வோனே**
**முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்**
**அச்சது பொடிசெய்த அதிதீரா**
**அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்**
**அப்புன மதனிடை இபமாகி**
**அக்குற மகளுடன் அச்சிறு முருகனை**
**அக்கண மணமருள் பெருமாளே.**

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தர்மானந்தசிவம் நித்திலன்
### அவர்களின்
# பாதச்சுவடுகளிலிருந்து...

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க அன்புடைமையை உயர் இலட்சியமாகக் கொண்டு எல்லோரிடமும் அன்பாகப் பேசி சிரித்த முகத்துடன் இதமாகப் பழகி சகலரதும் இதயத்தை வென்றவர் அண்மையில் இறைபதம் அடைந்த அமரர் தர்மானந்தசிவம் நித்திலன் ஆவார்.

1995இல் இடம்பெற்ற இடப்பெயர்வு பலரையும் வேரோடு பிடுங்கி தூர எறிந்தது. அதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் வாழ்ந்து வந்தபோது தர்மானந்தசிவம் மாலினி குடும்பத்தில் கனிஷ்ட புத்திரனாய், அவர்களின் செல்லப்பிள்ளையாய் அழகனாய், வவுனியா பொது வைத்தியசாலையில் 2000-01-24ஆம் திகதி திங்கள் அன்று அவதரித்தார். தந்தையின் நாடகத்துறை நண்பர் திரு.செ.விந்தன் அவர்கள் இவருக்கு "நித்திலன்" எனப் பெயர் சூட்டினார். (நித்திலம் என்பது முத்து) நித்திலனுக்கு த. யதார்த்தன், த. நவீனன் என இரு அண்ணாக்கள் உள்ளனர். குடும்ப குதூகலத்திற்கு ஒரு பெண்பிள்ளை இல்லாமையினால் "நிலா" என்று பெண்பிள்ளையின் பெயர் சொல்லிப் பெற்றோர் அழைத்தனர். நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் "நித்தி" என்றே அன்பாக அழைத்தனர்.

சிறுவயதில் இருந்து அன்புடன் வளர்ந்த மூவரும் வளர்ந்த பின்பும் அன்பும் ஆதரவுமாய் நையாண்டி, கிண்டல் செய்து மகிழ்வாய் இருந்தனர். மூத்த அண்ணா யதார்த்தனின் அறிவுரையை பெருமளவு ஏற்றுக்கொண்டு கல்வியில் கவனம் செலுத்துபவராக இருந்தார். தனது இன்பதுன்பங்களை பெற்ற தாயாருடன் பகிர்ந்து கொள்வார். அப்பாவிடம் வெளிக்காட்டாத ஆழ்ந்த அன்பை கொண்டிருந்தார். உறவினர்களுடனும் நண்பர்களுடனும் கலந்து பேசி அவர்களின் வீடுகளில் நடக்கும் விசேட தினங்களில் தன்னாலான உதவிகளைச் செய்து எல்லோராலும் விரும்பப்படும் ஒருவராக வாழ்ந்து வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திலன் தனது முன்பள்ளிக் கல்வியை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்ற முன்பள்ளியிலும் தரம் ஒன்றை வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார். பின்னர் தாயாரின் இடமாற்றம். காரணமாக யாழ்ப்பாணத்தில் குடியேறி தனது தரம் இரண்டு கல்வியை யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையிலும் தரம் மூன்றை வவுனியா திருக்குடும்ப கன்னியர் மட ஆரம்பப் பாடசாலையிலும் அதனைத் தொடர்ந்து தரம் 4-தரம் 5 வரை யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையிலும் கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தரம் 6 தொடக்கம் தரம் 10 வரை யா/ இந்துக்க ல்லூரியிலும் கற்றார். தந்தையாரின் ஓய்வின் பின்னர் தந்தையாருடன் இருந்து கற்பதற்கு பிரியப்பட்டு கிளி/ கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் தரம் 11-13 வரை கற்றார். உயர்தர வகுப்பில் வர்த்தகப் பிரிவை தெரிவு செய்து முதலாம் வருடப் பரீட்சையில் B, 2C பெறுபேற்றைப் பெற்று சித்தியடைந்தார்.

கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் வணிகமன்றத் தலைவராக இருந்து நற்பணி புரிந்தவர். படிக்கும் காலத்தில் பாடசாலையில் அமைதியான ஒழுக்கமுள்ள நல்ல மாணவனாகத் திகழ்ந்தார். வகுப்பில் ஆசிரியர்களுடன் நல்லுறவை, பணிவைப் பின்பற்றினார்.

“நஞ்சு இல்லாத உண்மையான நட்பை நேசிப்பவன் நான்” என்பது அவர் அடிக்கடி கூறும் வார்த்தையாகும். உண்மையான நட்புடன் பழகும் நல்ல நண்பர்களைப் பெறுவதிலும் அவர்களுடன் பழகுவதிலும் உதவி செய்வதிலும் வீட்டுக்கு வரும் நண்பர்களை நட்போடு. புன்சிரிப்போடு வரவேற்று உபசரிப்பதிலும் சலிக்காதவர். அவரின் மரணவீட்டில் அவர் நண்பர்கள் கத்திக்குழறி “நித்தி, நித்தி” என்று ஓலமிட்டதை அயலவர் கண்டு கண்ணீர் மல்கினர். நண்பர்களின் கண்ணீரே அவரது சிறந்த. நேர்மையான நட்புக்கு எடுத்துக்காட்டாகும். கிளிநொச்சி நண்பர்களுடன் நட்புடன் பழகுவார். கிளிநொச்சி மாணவ நண்பர்கள் அடிக்கடி இவரின் வீட்டிற்கு வருகைதந்து செல்வர்.

ஏதாவது விளையாட்டுத்துறையில் மேலோங்க வேண்டுமென்பது அவரது பெருவிருப்பு. நாடகத்தில் சிறுவயதிலிருந்தே ஆர்வம் காட்டினார். ஆரம்ப பிரிவு சிறுவர் நாடகங்களில் பங்குபற்றி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றவர். நாடகமும் அரங்கியலும் பாடத்தைத் தெரிவு செய்து நாடகங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேறி நடித்தமை குறிப்பிடத்தக்கது. காற்பந்து, கிரிக்கட், கரம் போன்ற விளையாட்டுக்களில் பங்குபற்றி முன்னேறத் துடித்தவர். அவற்றில் முன்னேற வாய்ப்பின்றிப் போக "ஜிம்" பயிற்சி பெற்று அதனூடாக தன்னை வெளிப்படுத்த பேரார்வம் கொண்டு பயிற்சி பெற்று வந்தார். அவனது ஆசையை நிறைவேற்ற காலன் அவருக்கு அவகாசம் வழங்காது அவரது வாழ்வை முடித்துக் கொண்டான்.

மருதனார்மடம் வெங்கடேசப் பெருமான் மீது அதீதபக்தி கொண்டவர். ஒவ்வொரு வெள்ளியும் விரதம் இருந்து வழிபடுபவர். தான் புதிதாக வாங்கிய மோட்டார் சைக்கிளை முதன் முதலில் கொண்டு சென்று அர்ச்சனை செய்து தன்னையும் மோட்டார் சைக்கிளையும் காப்பாற்ற வேண்டியபோது அவரது பக்திப்பரவசத்தைக் கண்டு பெற்றோரும் மூத்த சகோதரரும் கண்கலங்கிய காட்சி இன்று நெஞ்சைக் கனக்கச் செய்கிறது. அவன் அடிபட்டு இறந்த செய்தி கேட்டு அக்கோயில் அர்ச்சகர் கண்கலங்கி நின்றார்.

தனது மோட்டார் சைக்கிளை உயிரைவிட மேலாக நேசித்தவர். அதனை ஒரு உயிரினம்போல் நேசித்து பாதுகாத்து இரசித்து மகிழ்ந்தவர். அவரது மோட்டார் சைக்கிள் அவரது அறையிலேயே அவரது கட்டிலுக்கு அருகாமையிலேயே எப்போதும் இருக்கும். கட்டிலில் இருந்தபடியே அதனை இரசித்து மகிழ்வார். மோட்டார் சைக்கிளில் இருந்த அதிகபற்றினால் அதற்கு ஒரு கீறுகூட விழக்கூடாது என்பதற்காக வேகமாக ஓடமாட்டேன் என்றவர். இதனால் பெற்றோர் ஆறுதலடைந்திருந்தனர். 2019 ஆகஸ்ட் பரீட்சைக்கு தன்னை விரைவாகத் தயார்ப்படுத்தியிருந்தார்.

இத்தகைய நிலையிலேயே 14-06-2019ம் ஆண்டு வெள்ளிக்கிழமை தனது "ஜிம்" வழிகாட்டி ஆசிரியரின் திருமண வீட்டிற்குச் சென்று திரும்பும்போது யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் நடந்த விபத்தில் நெஞ்சில் அடிபட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று துரித வைத்திய உதவியின் பின்னர் வைத்திய உதவிகள் பயனளிக்காமையினால் உயிர் நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திலன்

நித்திலனே முத்தே
முழுமதியே தண்மதியே
செய்த தவத்தால் பிறந்த செக்கச் சிவந்த
சித்திரமே சிரிப்பழகா, என் ஊனே உயிரே
எங்கயடா சென்றாய் எமைவிட்டு
துன்பச் சேற்றில் சிக்கித் தவிக்கின்றோம்

மானிடம் வெறுத்த இன வன்முறையில்
ஈனர்கள் பொழிந்த குண்டு மழையினால்
இடம்பெயர்ந்து வாழ்கையில்
வவுனியாவில் பெற்றெடுத்த
வடிவழகே ஆணழகா!

நித்திலம் முத்தென்ற நிகரான கருத்தினிலே
நித்திலன் என்ற நாமம் என் நண்பரால் பெற்றவனே
பெண்பிள்ளை இல்லையென்ற
குறைதீர்க்கப் பிறந்தவனே
பெண்பிள்ளை பெயர் வைத்து
"நிலா" என்று அழைத்தோமே
"மாம்பழம்" என்று உன் அம்மா
மனதான அழைக்கையிலே
சாம்பலாய் போனாயோ என்
சரித்திரமே கண்மணியே.

நித்திலன், நித்தி, நிலான், நிலா, மாம்பழம்
அத்தனையும் உன்பெயரே
இஷ்டமுள்ளோர் ஒரு பெயரால் உனை அழைக்க
இன்முகத்தைக் காட்டி நின்றாய்
இதமான மொழி பகர்ந்தாய்
கட்டி அணைத்து முத்தமிட்டு களி கூர்ந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் அழிந்ததடா.
ஐயோ நாம் என்ன செய்வோம்.

பத்து மாதம் பெற்றெடுத்த - என்
பத்தினியாள் உன் அம்மா என்ன செய்வாள்
பெற்றெடுத்த வயிறு பற்றி எரிய
நிதம் நிதம் பதறுகிறான் உன்னை எண்ணி
நானும் சேர்ந்து நாள்தோறும் அழுகிறோம் துடிக்கிறோம்

அன்பைப் பொழிந்து அமுதூட்டி
அறிவூட்டி உனை வளர்த்து
அரிய வாழ்வை உனக்காய் அமைக்க எண்ணி
நாம் பட்ட கஷ்டம் எம் உள்ளே உள்ளடக்கம்
காது வலியால் வருந்தியபோதும்
காயங்கள் பல பெற்று கத்தியபோதும்
முன்னர் விபத்தில் நீ காயமடைந்தபோதும்
கண்ணீா விட்டு கண்ணீர் சிந்தி காத்தோமையா.

முகப்பருவின் மோசக் கரங்களால்
நீபட்ட துன்பம் நீக்க
எத்தனை வழிகளில் மருத்துவம் செய்தோம்
எவ்வளவு காசைக் கொட்டித் தீர்த்தோம்
நீ மனம் கலங்காதிருக்க, மகிழ்வாய் இருக்க
ஜிம்முக்குப் போக விருப்பம் தெரிவித்தோம்

விரும்பிய மோட்டார் சைக்கிள்
நாம் விரும்பாத போதும் உன் உளம் உடையாதிருக்க
உன் விருப்புக்காகச் செய்தோம்
சைக்கிளின் மீது கொண்ட பற்றால்
உயிரிலும் மேலாய் அதை மதித்தாய்
வேகமாய் ஓடமாட்டேன் என்று
அம்மாவுக்கு உறுதியளித்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையை அதிலே ஏற்றி
பள்ளிக்கூடத்தில் இறக்கி விட்டாய்
அதனையே பெருமையாய்
அனைவருக்கும் சொன்னாயே

I Love mom என்று சைக்கிளில்
sticker ஒட்டினாய்
அப்பாவின் பெயரையும் நீளமாய்
முகப்பில் எழுதினாய்
முகப்பருத் தாக்கம் குறைந்ததைக் கண்டோம்
படிப்பினில் அக்கறை உயர்வாய்க் காட்டினாய்
கோபத்தைக் குறைத்து நேசம் கொண்டாய்
அப்பாவோடு தர்க்கம் குறைத்து
சகோதரரோடு சந்தோசமாக இருந்தாய்
அன்பாய் அன்னையை அரவணைத்து நின்றாய்
அவள் சொல்லை உயர்வாய் மதித்தாய்

அண்ணன்மார் யது நவீனுடன்
சின்னவயதில் அறியா அடிபிடி
சிறந்தது எதுவும் உனக்கே என்றாய்
நீ எடுத்தது போக மீதியை எடுத்தனர்
உனக்காக எல்லா விட்டுக் கொடுப்பும்
உவந்தே செய்தனர்.
காலப்போக்கில் அண்ணன்மாருடன்
அன்பாய் பழகினாய் ஆவலாய் பேசினாய்
பகிடி, கிண்டல் செய்யும் போது
பெற்றோர் நாமும் பெரு மகிழ்வடைந்தோம்.

எல்லாம் கேட்டாய் எல்லாம் செய்தோம்
இன்று நீ விரும்பி பெற்றதெல்லாம் விட்டு
எமையும் விட்டு இடறிவிழுந்து இன்னுயிர் நீத்து
எதுவும் உனக்கென்றில்லாமல் எங்கே சென்றாய் எம்முயிர் கலங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நட்பே உயர்வென்றாய்
நண்பர்களுக்காக எல்லாம் செய்தாய்
துரோகம் செய்வோரைத் தூக்கி எறிந்தாய்
நல்ல நண்பர்களை நலமாய்ப் பெற்றாய்
ஒன்றா இரண்டா நண்பர்கள்
ஓராயிரமாய் உன் சாவு வீட்டில் கூடி நின்றனர்
அழுதனர், புரண்டனர், ஐயோ என்று ஓலமிட்டனர்
நித்தி, நித்தி எங்கயடா சென்றாய் எமைவிட்டு
வாடா வாடா மீண்டும் வாடா என்று கதறிய காட்சி
கூடிநின்ற அனைவரையும் அழவைத்தது, அதிரவைத்தது
"வாழு வாழவிடு" என்று சைக்கிளில்
வாசகம் எழுதினாய்
வாழ்வையே முடித்து
வானுலகம் சென்றாயோ.

சொந்த, பந்தம், உற்றார் உறவினர்
அப்பாவின் நண்பர், அம்மாவின் நண்பர்,
உன் நண்பர், அயலவர் என்று
அத்தனை பேரையும் உன் சிரிப்பால், அன்பால் வென்றாய்
அம்மாவின், அப்பாவின் உடன்பிறப்புக்களுடன்
அன்பைச் சொரிந்து அளவளாவினாய்

இறுதிச்சடங்கில் எல்லோரும் அழுத குரல்
எல்லோருக்கும் கேட்டது, ஆண்டவனைத் தவிர
அவர் என்ன செய்வார்
கடவுள் எல்லாம் கல்லானார்கள்
கண்ணை மூடி நித்திரை கொண்டனர்.
விதி என்ற பெயரால் சதி செய்தனர்.
எம் வேண்டுதலை ஆண்டவன் மீது கொண்ட அன்பை
அலட்சியம் செய்தனர்.
பெற்ற மகனை மடக்கிப்பிடித்து
குத்திக்குதறி எரியும் நெருப்பில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பலாக்கி சரித்திரம் படைத்தனர்.
எமை நிதம் சாகவைத்து
வேடிக்கை பார்த்தனர்.
விதியை வழிபாட்டால் வெல்லலாம் என்ற
நம்பிக்கையை நாசமறுத்தனர்.
விதிதான் மேலென்றால்
வேண்டாம் இந்தக் கடவுள்.

என்ன செய்வோம் நித்திலா
நீயில்லாத வாழ்வு ஒரு வாழ்வா
நிம்மதியின்றி நிலைகுலைந்து நிற்கிறோம்.

உனக்கென்று வீட்டில் ஓர் அறை
அதற்கென்று உன் விருப்பில் தனிக்கலர்
அதற்குள் எல்லா வசதியும் செய்தே தந்தேன்.
இன்று கட்டில் வெறுமை
கதிரை வெறுமை
போட்ட உடுப்பு, படித்த புத்தகம்
ஓடிய மோட்டார் சைக்கிள்
அத்தனையும் காட்சிப் பொருளாய்
இதயத்தை வாட்டி வதக்கி
கண்ணீரால் தோய்க்கிறதையா
உன் நடமாட்டம் இல்லா வீடு
நரகலோகமாக இருக்கிறதையா.

உன் நினைவுகள் போல
இன்னும் எத்தனை காலம்
இழுபட்டுச் சொல்லுமோ???

– உன் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கடைக்குட்டியே நிலாவே....

இடப்பெயர்வு தந்த இடரால்
இல்லிடம் விட்டு வவுனியாவில்
மூன்று செல்வங்களில் மூன்றாவதாய்
வந்துதித்தாயடா மகனே! நிலாவே!

பட்ட வேதனையெல்லாம்
பஞ்சாய்ப் பறந்ததடா
பொன்னின் நிறத்தில் மாம்பழமாய்
கிடந்தாயடா மகனே! நிலாவே!

சின்னப் பிள்ளை உனக்கு
சிறு பிணிகள் தொட்டபோது
கண்ணை இமை காப்பது போல கருத்தாய்
காத்து வளர்த்தேனடா மகனே! நிலாவே!

தத்தி நடை பயின்று
வண்ணக் கதைபேசி
கொள்ளைச் சிரிப்பாலே கொள்ளை
கொண்டாயடா மகனே! நிலாவே!

காண்போர் வியக்கும் வண்ணம்
கன்னக் குழிச் சிரிப்பால்
எல்லோர் மனங்களிலும் எடுப்பாய்
இடம்பிடித்தாயடா மகனே! நிலாவே!

பள்ளிக்கு நீ சென்று
பயின்ற காட்சியெல்லாம் கனவாய்
போகுமென்று கடுகளவும்
நினைக்க வில்லையடா மகனே! நிலாவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு வன்மையில் விளையாட்டில்
நாடக நடிகனாய் வாங்கிய பரிசெல்லாம்
எம் வீட்டு சோக்கேசில்
அழுகிறதடா மகனே! நிலாவே!

வாலிபப் பருவத்தில்
முகப்பரு வந்ததால்
முக அழகு போனதென்றாய்
மனவருத்தம் கொண்டாயடா மகனே! நிலவே!

உன் மனம் வருந்தக்கண்டு
அம்மாவும் மனம் வருந்தினேனடா
உன் கண்ணில் நீர் வழிந்ததால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டியதடா மகனே! நிலாவே!

உன் மனக் கவலை போக்க
உடன் நாடினேன் மருத்துவரை
பல ஆயிரங்கள் செலவழித்தேன்
பயன் ஏதுமில்லை யென்றாயடா மகனே! நிலாவே!

உன் குறை தீர்க்கவே
உன் மனச் சந்தோசத்திற்காய்
பலவும் செய்தேன் - பணம்
பெரிதில்லை யென்றேனடா மகனே! நிலாவே!

ஜிம்மிற்கும் போவேன் என்றாய்
உன் மனக்கவலை தீரும் என்றாய்
சென்றுவா மகனே என்றேன் சிரித்து
நீ மகிழ்ந்தாயடா மகனே! நிலாவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச நாட்கள் சந்தோசமாய்
குதூகலித்து மகிழ்வாயடா
கொடிய பருக்கள் மீண்டும் வர
கொட்டும் உன் கண்ணீரடா மகனே! நிலாவே!

உன் முகத்தில் பருவின் கருமையினை
சகபாடிகளின் கேலி கண்டு
பொறுக்காது நீ அழுவாய்
பொங்கி அழுதேன் நானடா மகனே! நிலாவே!

கடமைகள் பலவும் செய்து
கடைசிவரை எமைக் காப்பேனென்றாய்
இடைநடுவில் விட்டு எம்மை
எங்கு சென்றாயடா மகனே! நிலாவே!

கடைசி காலத்தில் கடைக்குட்டி நான்
பார்ப்பேன் என்றாய்
முதலே செல்லப்போவது தெரிந்ததாலா
உன் உழைப்பில் சேலை
வாங்கித் தந்தாயடா மகனே! நிலாவே!

அம்மாவுடன் ஒன்றாய் இருந்து
சாப்பிடும் வேளைகளில் உன்
மனக்கிடக்கைகளை எப்போதும்
ஒளிவு மறைவின்றி பகிர்ந்து
கொள்வாயடா மகனே! நிலாவே!

பல்கலைக் கழகம் செல்வேன்
பாங்கில் வேலை செய்வேன்
குருவின் திருமணவீடு முடிந்ததும்
குந்தி இருந்து படிப்பேன்
என்றாயடா மகனே! நிலாவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை முடியட்டும் அண்ணன்மாருடன்
கண்டி பார்ப்போம் என்றாய்
கொழும்பு பார்ப்போம் என்றுரைத்தாய்
ஆணழகன் போட்டி என்றாய்
அதற்கு ஆயத்தம் செய்வேன்
என்றாயடா மகனே! நிலாவே!

முதல் நாள் இரவு நடுநிசிவரை
அம்மாவோடு அனைத்தும் பகிர்ந்தாய்
கடைசி இரவு அதுதான் என்று
கடுகளவும் நான் எண்ணவில்லை
குமுறி அழுகிறேனடா மகனே! நிலாவே!

வயிறு பற்றி எரிகிறது, பரிதவிக்கிறேன் நிலாவே
பாவம் என்ன செய்தேன் பாவிநான்
இறைவன் ஏனோ பழிவாங்கினான்
போதும் இவ்வுலக வாழ்வு - விரைவில்
என்னையும் கூப்பிடு உன்னுடன் மகனே! நிலாவே!

அன்பு அம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை நிலாவே! அருமைத் தம்பியே!

நிமிர்ந்த நடை
நேர் கொண்ட பார்வை
செக்கச் சிவந்தமேனி
சீரான முக அமைப்பு
உயர்ந்து வளர்ந்த உருவம்
திரண்டு உருண்ட தேகம்
முகத்தில் குழிவிழும் புன்சிரிப்பு
முத்தான பல்வரிசை
அத்தனையும் அரசவம்ச அடையாளங்கள்.

சுத்தம் சுகாதாரம் எப்போதும் பேணல்
குளிப்பில் பெரு விருப்பம்
அடிக்கடி நண்பரோடு கடலுக்கு செல்லும் பழக்கம்
பற்சுத்தத்திற்கு முன்னுரிமை
வண்ணக்கலர் உடுப்பில் கூடுதல் விருப்பம்
வாசனைத் திரவியம் எப்போதும் பூசல்
வகைவகையான சோப்பு போடல்
அயன் குலையா ஆடை
ரீ சேட்
அதன் மீது ஓவகோட்
கறுப்புக் கண்ணாடி
அத்தனையும் அணிந்து மோட்டார் சைக்கிளில்
நிமிர்ந்து செல்லும்போது பார்க்கக் கொள்ளை அழகு

மோட்டார் சைக்கிளில் அலாதிப்பிரியம்
அதன் பாதுகாப்பில் அதிக கவனம்
அதில் கீறல் விழுந்தால் அழும் சுபாவம்
உயிரைக் கொடுத்தும் அதைக் காக்கும் ஓர்ம எண்ணம்
அறையில் வைத்து பின் கட்டிலில் இருந்து
பார்த்துச் சிரிக்கும் குழந்தைத் தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலான் RS என தன் முகப்புத்தக மாற்றம்
I Love Mom அத்துடன்
அப்பாவின் பெயர் பொறித்து நன்றிக்கடன் தீர்த்த
நன் மனப் பாங்கு.

"வாழு வாழ விடு" என்ற அஜித்தின் வாசகம்
சயிக்கிளில் பொறித்த "தல" வாரிசு இவன்
அதனால் தல நித்தியென நண்பர்கள் அழைத்தனர்

எதிலும் கெத்தாய் இருக்க விருப்பம்
R.S M சயிக்கிள், S8 தொலைபேசி படுக்கும் கட்டில் பாவிக்கும்
மெத்தை படிக்கும் அறை பயன்படுத்தும் மின்விசிறி
அத்தனையும் கெத்து என்ற உயர்ந்த ரகம்.

நண்பர்களென்றால் போதும் அவனுக்கு
எப்போதும் நண்பர்கள் எம் வீட்டில் நிறைந்திருப்பர்
நல்ல நண்பர்களை சேர்ப்பதில் ஆர்வம்.
உண்மை நண்பர்களுக்காய் உயிரையும் கொடுப்பான்
வறிய நண்பர்களுக்காய் உதவும் மனப்பாங்கு
நம்பிக்கைத் துரோக நண்பர்களை நாடவும் மாட்டான்.

எப்போதும் நண்பர்களுடன் கூடிக்குலாவி
ஓடி விளையாடி மகிழ்ச்சியாய் இருக்க மனதார விருப்பம்
நண்பர்கள் மத்தியில் நடுநாயகன் இவன்
நாடகம் நடிக்க நல்ல விருப்பம்
ஆடிப்பாட அலாதி விருப்பம்
விளையாட்டுக்களில் முன்னின்று உழைப்பான்
ஆசிரியர்கள் மீது அலாதிப் பிரியம்
வீட்டு வேலைகள் செய்வதில் வேகம் கூட
கழுவித்துடைத்து கச்சிதமாக வைப்பான்
திருமண வீடு மரணச்சடங்கு பிறந்தநாள் கொண்டாட்டம்
என்பவற்றில் முன்னின்று உழைப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார் உறவினரை தன் புன்சிரிப்பால் வரவழைப்பான்
வீட்டுக்கு வந்தவரை விருப்புடனே உபசரிப்பான்
கள்ளமில்லா உள்ளத்துடன் கனிவாக பழகிடுவான்
இறைவன்மீது இவனுக்கு பக்தி
திருநீற்றுக் குறியுடன் தினம் வெளிச்செல்வான்
விளக்கேற்றி மந்திரம் ஓதுவான்
வெள்ளிக் கிழமைகளில் விரதம் எப்போதும்
வெங்கடேஸ்வர் மீது அளவற்ற பக்தி
அவரை தரிசிக்க மருதனார்மடம் செல்வான்.

தன் உடலின் மீது தீராத பற்று அதனால்
உடலை உறுதியாக்க ஒழுங்கான உடற்பயிற்சி
உடல் நிறையை குறைக்க கட்டுப்பாடான உணவு உண்ணும் பழக்கம்.
கட்டுறுதி உடல்பெற தேவையான உணவு உண்ணல்
அதற்கான மன உறுதி அவனிடம் காணப்படும்.
குளிர்பானம், பழவகைகள் என்றால் கொள்ளை ஆசை.
இத்தனையும் உண்டு என்ன
அவன் இன்று உயிருடன் இல்லை.
முற்கோபம் பிடிவாதம் விரும்பிய பொருளை
உடன் பெற எண்ணும் மனநிலை
படிக்க ஆசை. ஆனால் நீண்டநேரம் இருந்து படிக்க முடியாநிலை
இத்தனைக்கு மத்தியிலும் சத்தமிட்டு படித்து தன்னிலை சமாளிப்பான்.
அப்பாவின் கண்டிப்பில் அறவே விருப்பமில்லை.
அடிக்கடி அவரோடு இல்லத்தில் முரண்பாடு
அம்மாவோடு சத்தமிட்டு காரியம் சாதிப்பான்
சில நாட்கள் செல்ல பெற்றாரோடு சிநேகம் கொள்வான்.
அண்ணாமாரோடு பகிடி கிண்டல் என காலத்தைப் போக்குவான்
இத்தனை பண்பும் இருந்த எம் தம்பி
பிள்ளைத்தனத்தால் செய்த பிழைகளை பொறுத்தே வாழ்ந்தோம்
அவனுக்காக எல்லா வழியிலும் விட்டுக்கொடுத்தோம்
அவன் மகிழ்ச்சியே எம் மகிழ்ச்சியென எண்ணியே இருந்தோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வாழ்வில் முன்னேற வழிகாட்டினோம்
அவன் படிப்பில் எடுத்த முயற்சி கண்டு மனதால் மகிழ்ந்திருந்தோம்.
சின்ன வயதில் எமக்குள் அடிபிடி சண்டைகள்
உனக்கு எனக்கு என்ற போட்டித்தன்மைகள் எல்லாம் மறைந்தது.
வளர வளர எம்முள் அன்பு வளர்ந்தது.
வளர வளர நட்பும் வளர்ந்தது
ஒருவரின் உயர்வில் ஒருவரின் அக்கறை
ஒன்றாய் இருந்ததால் ஒரே குதூகலம்
முன்னைய அடிபிடி சிரிப்பாய் வந்தது.
சொல்லிச் சொல்லி சுகம் அனுபவித்தோம்
பலரும் பேசும் வகையில் பண்பை வளர்த்தோம்
எமைப்பெற்ற தாய் தந்தையை பெருமையாய்
- பேண கனவுகள் கண்டோம்
கனவுகள் எல்லாம் தவிடுபொடியாகி தகர்ந்தது
தம்பியின் சாவு நம் உதிரத்தை உறைய வைத்தது
ஐயோ நித்தி என்று வாய்விட்டு அழ வழிசமைத்துவிட்டது
தம்பியின் அகால மரணத்தின்போது நாம் யாரும்
அவன் அருகில் இல்லாமல் போனநிலை
- எமை எப்போதும் வாட்டுது
சகோதரச்சாவின் நினைவலைகள் வாழ்வுள்ளவரை
- வளரும் ஒன்றாயிற்று
எங்கள் மனதை சாந்தப்படுத்த என்ன செய்வோம்?

(நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்)

அன்பு அண்ணாமார்
**த. யதார்த்தன் ( யது )**
**த. நவீனன் ( நவீன் )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான முத்தே!

நித்திலனே என் சகோதரி பெற்றெடுத்த முத்தே
பாரினில் வாழும்போது பாசத்துடன் பெரியம்மா
பெரியப்பா என்பாயே
பார்த்ததும் இன்முகத்துடன் புன்புறுவல் புரிவாயே
அதை மீண்டும் பார்க்கத் துடிக்குது ஐயா மனம்
எங்கிருந்தாலும் ஓடோடி வந்திடு ஐயா
ஒரு கண் பார்த்திட

உன் பிரிவால் துயருறும்
**பெரியம்மா, பெரியப்பா**
**ப. பிரணவன், ப. சங்கீர்த்தன்**
**ப. கானப்பிரியா, ப. நந்தகோபன்**

## மருமகனே நிலாவே

பாசமலரே எங்கள் மருமகளே நித்திலா
எங்கே ஐயா போனாய் எங்களை விட்டு
உன் அபிநயமான அன்புச் செயல்களை
மறக்க மறுக்குதையா மனம்
மாமனாய் மட்டுமல்லாது தோழனாய்
அல்லவா எங்களோடு பழகினாய்
வேகுதய்யா எங்கள் மனம் வேகமாய்
வரமாட்டாயோ மாமா என்றழைக்க நித்திலா!

உன் பாசமான
**மாமாமார் குடும்பம்**
**ஆனந்தன் மாமா**
**முகுந்தன் மாமா**
**பார்த்தி மாமா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே ஓடி மறைந்தாய்?

என் அன்பு மருமகனே நித்திலா! நீ விபத்தில்
இறந்துவிட்ட செய்தி கேட்ட அக்கணமே
இடிந்ததடா என் மனது துடிதுடிப்பாய்
துள்ளித்திரியும் உன் இதயம் இன்று ஏனோ
தன் துடிப்பை நிறுத்திக் கொண்டதடா
நான் ஊருக்கு வரும்போது என் மீது அன்பு காட்டி
என் பிள்ளைகளுடன் விளையாடித் திரிவாயே!
என்னை அன்ரி அன்ரி என்று
கூப்பிட்டுக் கொண்டிப்பாயே நிலான்.
என் அண்ணா அண்ணிக்கு இப்படியொரு இழப்பா?
இதயம் வலித்து கதறுகிறார்கள்.
ஆறுதல் சொல்லமுடியாத ஆழமான வலியடா
உன் கலகலப்புக்கு என்றுமே
குறையில்லை. நீ வாழ்ந்த நாட்களை
என்றுமே ரசித்து வசந்தமாக்கி
மகிழ்வடைந்தாய். அடுத்தமுறை நான்
ஊருக்கு வரும்பொழுது உன்னை
பல்கலைக்கழகத்தில் வந்து சந்திப்பேன் என்று
தொலைபேசியில் கதைக்கும் பொழுது
ஓம் அன்ரி நல்லா படிப்பேன் என்று சொல்வாயே
நிலா உன்னை எனி எப்பொழுது பார்ப்போம்.
இன்று நீ உதிர்ந்த பூவாய் வாடியதால்
எல்லோரும் பரிதவித்து கண்கலங்கி நிற்கின்றோம்.
உன் இழப்பை ஈடுசெய்ய இயலாது
என்றும் உன்னை நேசிக்கும் உன் அத்தை
உனக்காய் இறைவனிடம் சாந்தியடைய வேண்டி
கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
**உஷா அத்தை குடும்பம்**
**செல்வா**
**குரு குடும்பம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தமும் நின் நினைவில்...

நித்திலனேநித்தியச்சிரிப்பழகா
நின்வதனம் காட்டாயோ
சத்தியத்தின் சோதனையா
சாவுன்னை அணைத்ததடா
வித்தகன் தர்மாவும்
வித்தகி மாலாவும்
உத்தமமாய் பெற்றபிள்ளை
உயிர்பறித்த மாயமென்ன

பெற்றவர் பேதலிக்க
பெரும் சோகம் தான்சுமந்து
உற்றார் உடன்பிறந்தோர்
உயிர் உருகி அழுதுருள
கற்றவரும் கதறியழ
கவலையிலே நண்பர் விழ
சற்றுமிரங்காமல்
சடுதியிலே போனாயே

கல்வியிலே நீ சிறந்து
கரைகாண்பாய் என இருந்தோம்
வல்லவனாய் நீ வாழ்வில்
வளர்ந்திடுவாய் என வாழ்ந்தோம்
பல்கலைகள் கற்றுவந்தாய்
பார்த்து மகிழ்ந்திருந்தோம்
இல்லை நீ இன்று
இதயம் வலிக்குதையா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைப்பூப் பேரழகு
முறுவலிக்கும் புன்சிரிப்பு
எல்லையில்லாப் பேரன்பில்
எல்லோரும் அணைக்கின்ற
நல்லவனே நித்திலனே
நாம் உம்மை மறப்போமா
இல்லத்தில் நீ இருந்தால்
இல்லையென்று ஏதுமில்லை

தாங்கமுடியாது தவிக்கும் உன் தந்தையடா
ஏங்கி அழும் உன்...அன்னை துயரமடா
தாங்கியுனை அணைக்கும்
அண்ணர்களின் சோகமடா
தூங்கமுடியாது துடிக்கின்றபாசமடா
துயரம் சுமக்கும் உறவுகளின்நேசமடா
நாங்களும் துயர்பகிர்ந்து
நல்லிறையை பிரார்த்தித்தோம்
ஓம் சாந்தி
ஆத்மார்த்த அஞ்சலிகளோடு
ஆத்ம சாந்திபெற துதித்தோம்.

– கலாகணேசன் (மாமா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கவிட்டு எங்கே சென்றாய்?

இருண்ட இரவில்
இடியாய் வந்திறங்கிய - நீ
இல்லை என்ற செய்தி கேட்டு
இடிந்தே போனோமடா

ஐயகோ! நித்தி
ஏற்கமனம் மறுக்குதடா

அடிக்கொருமுறை அக்கா அக்கா என நீ
ஆசையாய் அழைக்கும் போதெல்லாம் - என்
கூடப்பிறந்தவளின் இழப்பை - உன்
நேசம் பூர்த்தி செய்ததடா

எம் வீட்டில் நீ இருந்த பொழுதுகளும்
உரிமையாய் உரித்தாய்
பெரியம்மா, பெரியப்பா, அக்கா, அத்தான் என
பாசத்தைப் பகிர்ந்த நினைவுகளும்

நிலையான புன்னகையுடன்
நிழற்படங்களில் உன் வசீகர வதனம்
நியமாய் எம் நெஞ்சத்தை
நிர்மூலமாய் ரணம் ஆக்குதடா

என்னவனின்
மாப்பிள்ளை தோழனாய்
மார்பில் போட்டு தொட்டில் கட்டிய
மாமனாய்
என் வீட்டு நிகழ்வுகளின் மைந்தனாய்
நீ இருந்த காட்சிகள் யாவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் தொடரும் என
எதிர்பார்த்த பொழுதுகளை
ஏங்கவிட்டு எங்கேயடா
ஓடி மறைந்தாய்

வாழ்க்கையில் வலிகள்
வலுவிழந்து போகும்
காலம் தான் இங்கு உண்டோ
யாவும் விடையற்ற
வினாவாகியே போகிறதடா

என்றும் உன் நினைவுகளுடன் உன்
**பிரியா அக்கா, அத்தான், மருமகன்**
**பெரியம்மா, பெரியப்பா ( கிளிநொச்சி )**

**பொதுநலன்** - வாழ்வில் மேன்மைமிக்க நோக்கம்.

**பொறுமை** - மேதையின் இன்றி அமையா அம்சம், எல்லாத் துன்பங்களுக்கும் பரிகாரம்.

**மகிழ்ச்சி** - எல்லா நோய்களையும் தீர்க்கும் வியத்தகு மருந்து. வேதனையின் இடைவேளை

**மரியாதை** - நற்பழக்கவழக்கத்தால் வருவது. மற்றவர்களை மதிப்பது, மற்றவர்களால் மதிக்கப்படுவது.

**மனச்சாட்சி** - மிகச்சிறந்த வழிகாட்டி, ஆயிரம் சாட்சிகளுக்கு ஈடானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நித்திக்குட்டியே!

கண்ணுக்குள் இமையென நிற்கின்ற நித்திலனே
உன்னைக் காணாமல் எண்ணற்ற துயரில் ஏங்கித் தவிக்கின்றோம்
என் செல்லமே நாம் வரும்போது தக்க பணிகள் செய்து
எம்மை தலையில் தாங்குவாயே பொல்லாத காலன் சொல்லாமல்
எம் எல்லாரையும் கொல்லாமல் கொல்லும் நிலைக்கு ஆளாக்கி விட்டானே.
சிட்டுப்போல் சிங்காரமாய் வண்டியில் பறப்பாயே
இன்று சிரித்த முகத்தோடு அமைதியல் உறங்குகிறாய்
உன்னுடைய சிரிப்பை இனி எங்கு காண்போம் இன்று எம்மை
அழவைத்துவிட்டு எங்கு சென்றாய். இன்று நிர்க்கதியற்றுப் போனோமடா
நீ வாழவேண்டிய வயதில் வாழ்க்கைக் கனவுகளைக் கலைத்தனையே
வசந்தகாலம் கசந்து போனதோ!
சுகந்தமான மஞ்சம் சுகமாக எம்மை மறந்து உறங்குகின்றாய்
உன் அன்னையை ஒரு கணம் எண்ணிப் பார்த்தாயா.
இனி அவள் நெஞ்சம் தாங்குமாடா?
உன் நினைவை, நீ எம்மோடு பழகிய நாட்கள்
உன்னுடைய சிரிப்பு எங்களால் மறக்கமுடியாது.
எம் நித்திக் குட்டியே அமைதியாய் நீ உறங்கு.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
**சுவிஸ் பெரியப்பா, பெரியம்மா**
**குடும்பத்தினர்**

**பாசம்** - நம் மனதை வேதனைப்படுத்த நாம் மற்றொருவருக்கு அளிக்கும் சக்தி, கனல். அதை தணிக்காவிடில் இதயமே பற்றி எரியச்செய்யும்.

**புண்ணியம்** - மற்றவர்களுக்கு நன்மை செய்வது.

**புலனடக்கம்** - மனிதனின் வாழ்க்கை விதி. மனிதனை மனிதனாக்குவது, சமயங்களின் அடிப்படை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்பு நிலாவே!

என் உற்றதோழி மாலினி பெற்றெடுத்த
உத்தம நிலாவே நித்திலனே
நீ உயிர் நீத்தாய் என்ற செய்தி கேட்டு
என் உயிர் உறைந்து போனது அக்கணம்
என் மகள் உன் நண்பி நிமியும்
கதறி அழுதாளடா அக்கணம்.

இடிவிழுந்த இச்செய்தி
பொய்யாகிப் போகாதா என
ஏங்கியது எம்மனம்
துடித்தோம் துவண்டோம் அக்கணம்

நாம் இலங்கைக்கு வரும்போது
உன் இனிய சிரிப்புடன்
இனிய மொழிபேசி
குமுதினி அன்ரி என அழைப்பது
இன்றும் என் காதில் கேட்கிறது.

இம்முறை வந்தபோது
இன்முகம் கொண்டு வரவேற்கும்
நிலா முகம் எங்கே போனது
உனக்கு ஏற்பட்ட காயம் தினமும் எமக்குள் வலிக்கிறது.
துன்பக் கடலில் மிதக்கவிட்டு
எங்கு சென்றாய் நிலாவே
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

உன் பிரிவால் வாடும்
**குமுதினி அன்ரி – லண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனே நல்மகனே!

என் அன்பு உயிரே ஆணழகா
உந்தன் புன் சிரிப்பால்
என் இதயத்தை வென்றவனே
சின்ன வயதில் தூக்கி முத்தமிட்டு
அகமகிழ்ந்த நாள் நினைவு
துன்ப அலையாய் என்மனதில் மோதுதையா
உன் வீட்டிற்கு வரும்போது என்னை கட்டி அணைத்து
- கனிவுமொழி சொன்னாயே.
பகிடிகள் விட்டு என்னுடன் பழகி நீ வாழ்ந்தாயே
நான் பெறாப்பிள்ளையாய் மட்டுமின்றி
- நட்புறவோடு பழகும் நண்பனுமானாயே.
சித்தி தம்பிமார் வரும்போது சிரித்து வரவேற்று சிறப்பாக உபசரித்தாய்
இன்று என் பிள்ளைகளுக்கு நித்தியண்ணா என்று சொல்ல
- இன்று நீ இல்லை
உன் சாவுச்செய்தி கேட்டு வாய்விட்டு அழுத கண்ணீர்
இன்னும் வற்றவில்லை.
எப்படி மறப்போமைய்யா உடன் வதனத்தை எம்
எம் இதயம் இருக்கும் வரை.
இறைவனடி சேர்ந்து இனிதாக வாழ்.

உன் பிரிவால் வாடும்
**ஜனாச் சித்தப்பா குடும்பம்**

| | | |
|---|---|---|
| **பகுத்தறிவு** | - | சிந்திக்கும் தன்மையின் கூர்மை. |
| **பணிவு** | - | அறிவின் வாயில், சிந்தனையிலிருந்து நாம் கற்கும் முதல் பாடம், ஒழுக்கநெறியின் மூத்த பிறவி, குழந்தை கற்றுக்கொள்ளவேண்டிய முதற்பாடம். |
| **பண்பு** | - | மனிதனை உயர்ந்தவனாக்குவது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவியாய் இருந்து பதறுகிறேன்

சின்னண்ணாவின் சிரிப்பழகா
எம்குலப் பெருமையின் சிறப்பழகே
அண்ணி மாலா பெற்ற அருந்தவமே
அண்ணாமாரின் அவலம் தீர்க்கவந்த
கடைக்குட்டியே கண்மணியே
ஆண்டவனின் கருணை இன்றி
அகால மரணத்தால் அணைந்து போனாயோ
வாழும் வயதில் வானகம் சென்றாயோ
இறுதிக்கிரிகையில் கூட உன் பூத உடலைக் காணா பாவியானேன்
உன் மரணச்செய்தி கேட்டு என் குடும்பமே குளறி அழுகுதையா
அந்நிய தேசத்தில் இருந்து அருகில் வரமுடியவில்லை
பிரான்ஸ் சட்டங்கள் உனைத் தரிசிக்க விடவில்லை
ஐயா, அம்மா, அக்கா, அண்ணன் மகள் பிறேமா அடுத்து நித்திலன்
அத்தனை பேரையும் கட்டையிலும் காணமுடியாத
பாவியாய் இருந்து என் நெஞ்சம் பட்டபாடு யாரறிவர்
அண்ணா, அண்ணி, அண்ணாமாரோடு உறவினர் நண்பர்
ஒன்றுகூடி அழும் அழுகையிலே
- நாமும் ஒருவராய் இங்கிருந்து அழுகின்றோம்
என் பிள்ளைகள் அண்ணா என்று சொல்ல நிலா நீ இல்லை
நெஞ்சம் கனக்கிறது, கண்ணீர் விடுவதைத் தவிர
- யான் என்ன செய்வேன் ஐயா
உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறேன்.

நெஞ்சம் கனத்த நினைவுடன்
**ரவிச்சித்தப்பா குடும்பம் (பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனை தாங்கவில்லை

நித்திலனே அன்பு மச்சான்
நினைவழித்துப் போனாயோ
சின்ன வயதில் எம்முடனே
சிரித்து விளையாடித் திரிந்த நிலை மறக்கலையே
அன்பு மாமா மாமியுடன்
செல்லமாய்ப் பேசி சிரித்து மகிழ்ந்தாயே
கள்ளமில்லா உன் சிரிப்பால்
கொள்ளை கொண்டாய் எம்மையெல்லாம்
உம் மரணச் செய்தி கேட்டு
மனமுடைந்து போனோமையா
கொடுத்து வைக்கவில்லையடா உன்னுடன் கூடி வாழ இவ்வுலகில்
ஆசை மாமாவின் அன்புக் குடும்பத்திற்கு
இப்படியொரு அவலநிலை ஏனய்யா வந்தது
வேதனை தாங்காது வேகுகின்றோமையா
காலனின் கொடுமை கண்டு
கண்ணீரில் நனைகின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் வேண்டுகிறோம்.

சின்னமாமா, மாமி
**பிரதீப் (பிரான்ஸ்)**
**இந்து, தர்ஷா (லண்டன்)**
**லக்ஷி**

**நல்லொழுக்கம்-** உனக்கு நீயே அணிந்துகொள்ளும் நன்மதிப்பு.

**நன்றியுணர்வு** - அதிக சிரத்தையுடன் வளர்க்க வேண்டிய பயிர். அதை கீழோரிடம் பார்க்கமுடியாது.

**நீதி** - வாய்மையின் செயற்பாடு. மனிதருக்கு தீங்கு எதுவும் இழைக்காதிருத்தல், ஒவ்வொரு மனிதனும் சட்டப்படி தனக்கு உரியதை பெறுவதற்கு வகை செய்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழிவிழும் சிரிப்பழகே...

நித்திலா நித்திலா என்றழைக்கின்றோம்
எங்கே சென்றாய் எங்கள் நித்திலா

அன்று உன் ஜெனனத்தின் போது உன்
அழுகுரல் கேட்டு சிரித்த உன் தாய் இன்று
தன் வாழ்வில் சிரிப்பையே மறந்து உன்
வதனம் காண தினமும் துடிக்கின்றார்.

அன்று நீ பிறந்தபோது தன் மூன்று முத்துக்களில்
நீ ஒரு முத்தென அகமகிழ்ந்த உன் தந்தை
இன்று ஒரு பித்தனாக நித்தமும் தவிக்கின்றார்.

அன்று உன்னிடம் போட்டி போட்ட உன் அண்ணன்மார் - இன்று
போட்டியிட நீயில்லை சிரித்து மகிழ
தம்பி நீயில்லை என்றெண்ணி நாளும் பரிதவிக்கின்றனர்.

அன்று உன் குறும்புகளையும் உன் குழி விழும் சிரிப்பையும் கண்டு
ஆனந்தம் கொண்ட உன் சொந்தங்கள் - இன்று
அதை மீண்டும் காண ஆவல் கொள்கின்றனர்.

அன்று உன்னோடு சின்னச்சின்ன சண்டைகள் போட்ட
உன் நண்பர்கள் கூட்டம் இன்று உன்னோடு அனைத்துமே பகிர
காத்துக் கிடக்கின்றனர்.

இத்தனையும் விட்டு நீயோ நிலையென்று எதுவும் இல்லை
இவ்வுலகில் என நிரூபித்துச் சென்றுவிட்டாய்.
45 நாட்கள் என்ன 45 யுகமே ஆனாலும் அகலாது
ஐயா உன் நினைவலைகள் எம் மனதை விட்டு

உன் பிரிவால் துயருறும்
**அக்காமார் வி. சுகிர்தா**
**ச. சுஜாதா (பிரான்ஸ்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பின் இழப்பு

அன்னை தந்தை இருந்தும்
அவர் அரவணைப்பில் வாழ்ந்தும்
நிலைத்து நீ தழைத்து வாழ முன்
அழைத்திட்டானோ அல்லது - மறு
அவதாரம் எடுத்திட்டாயோ

அழைத்தவன் ஆண்டவன் ஆயினும்
அடுத்தவர் வயிற்றில் மறுபிறப்பு எடுத்தாயினும் - உன்
அன்னை தந்தை கடன் தீர்ப்பாயோ
அன்பைத் துளிர்க்க வைப்பாயோ!

எவன் கண்பட்டதோ - அல்லது
எமன் கண் பட்டதோ
வீதியில் உன் விதி முடியுமென
விடைபெற்று விரைந்துவிட்டாய்
வரைந்த படம் போல்
விரிந்து கிடக்குது மனதுக்குள் துன்பம் மகிழ்வு அற்று வாடுகிறேன்
மாமன் மகனே மச்சான் உறவே

பட்டு வேட்டியும் பவள புன்சிரிப்பும்
சந்தன பொட்டும் சாந்த முக அழகும்
கட்டான உன் உடல் அழகும் - நீ
கட்டிய வேட்டியின் தனி அழகும்

மணவாள தோழனாய் மணவறையில்
மன மகிழ்வோடு இருந்தவேளையில்
பிண அறையில் நீ பனைமரமாய்
நீட்டி நிமிர்ந்து கிடக்கையிலே
கனத்ததடா இதயம் கண்கள் சிவந்ததடா
காலம் கடந்தாலும் துயரம் மீளாது
உன் இறப்பின் இழப்பின் தவிப்பை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்க இயலாமல் துவளுது இரு இதயம்
ஆற்றுப்படுத்தவும் ஆறுதல் கூறவும்
அருகில் இல்லாது உருகுது ஒரு இதயம்
மாமன் மகனே மச்சான் உறவே

கவி நயத்துடன் கவி படைக்க
கற்பனைக்கான கவிமடல் இது அல்ல
கனத்த இதயத்துக்குள் இருந்து
கசிந்த கண்ணீர்த் துளிகளடா

உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை கரம்கூப்பி
சிரம் தாழ்த்தி வேண்டி வணங்குகிறேன்.

உன் பிரிவால் வாடும் மச்சான்
**த. ரமேஸ் – லண்டன்**

## மாமன் மகனே மச்சானே

ஆசை மாமாவின் அன்புப் புத்திரனே
உன் இழப்பின் வலியதனால்
சித்தம் கலங்குதடா, இதயம் நொருங்குதடா
அத்தை பெத்த முத்து மூன்றும்
அகிலத்தை ஆள்வார்கள் என்றிருந்தோம்
முத்தான மூன்றில் நீயின்று இல்லையடா
நீயில்லா வாழ்வில் உனை நினைத்து அழுகின்றோம்
மாமா குடும்பம் அமைதி, சாந்தம் பெற
அருமை மச்சான் நீயும் ஆண்டவன் அடியில்
அமைதி பெற வேண்டி நிற்கும்

மச்சாள்மார் குடும்பம்
**ரதி குடும்பம்**
**விஜி குடும்பம்**
**கவி குடும்பம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திலனே... முத்தே....

நித்திலன்! ஒரு நித்திய புன்னகை அழகன். தர்மா - மாலினி உவர்ந்து பெற்ற புதல்வர்களில் ஒருவன் - மூன்றாமவன் - மூன்று புதல்வர்களும் பெற்றோரும் சேர்ந்திருக்கும் போது அந்த இல்லம் கோயிலாக மிளிர்ந்தது. எப்படி நினைப்பது இப்படியாகுமென்று. அந்தக் கோயிலில் இருந்து ஒரு விக்கிரகம் ஏன் பிடுங்கி எறியப்பட்டது. பிள்ளைகளைப் பெறுவதும் பிள்ளை களை வளர்ப்பதுவும் ஒரு புனிதக்கடமை. தர்மா - மாலினி குடும்பம் அதைச் சரியாகச் செய்தது. பிள்ளைகள் எல்லோரும் ஒரே மாதிரி இருப்பார்களா? இருக்க வேண்டுமென்றுதான் நினைக்கிறோம் நாங்கள். ஆனால் அது அப்படியல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம், ஒவ்வொரு மாதிரி, ஒவ்வொரு வகை, ஒவ்வொரு போக்கு. அதற்கான புறச்சூழ்நிலைகள், குடும்பச் சூழ் நிலையைவிட அதிகம். அந்த உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மூத்தவர் இருவரும் பல்கலைக்கழகங்களில் கற்றலில் ஈடுபடத் தொடங்கினர். தற்காலிகமாக குடும்பச் சூழ்நிலையில் இருந்து விலகி இருக்கும்படி அவர்களின் சூழ்நிலை. செல்வமகன் நித்தியோடு தாய் தந்தையின் வாழ்க்கை. சூழல் சும்மா விடுகிறதா? ஆசைகளை அள்ளிக் கொட்டுகிறது நித்தியின் மனதில்.

இதற்கிடையில் அவருக்கொரு இயற்கையின் உபாதை. முகத்தில் அதிக பருக்கள் போட்டு முகத்தின் பெரும்பகுதி நிறம் மாறியது. அது அவனுக்கொரு தற்குறை - தாழ்வு மனப்பான்மை, சகபாடிகளின் கிண்டல். குறும்பு கூட இதற்குள் இருக்கலாம். அத்துடன் காதில் சீழ்வடிதலுக்காகச் செய்த சத்திரசிகிச்சையின் பின் ஏற்பட்ட உள உபாதை. எப்படியோ அவன் இவற்றால் வருந்தினான், வெகுண்டான், விரக்தியடைந்தான். 2018ல் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்ற மறுத்தவன், பெற்றோரின் அன்பான அறிவுரைகளினால் தோற்றினான். சித்தியும் அடைந்தான். (B, 2C) இது பல்கலைக்கழகத்தில் தான் விரும்பியதுறைக்கு போதாமையினால் மீண்டும் முயன்றான். பல்கலைக்கழகம் சென்றே தீருவேன் என்றான்.

மூர்க்கமாக வந்த முகப்பருவை, முகமறுவை நீக்கப் பெற்றோர் முயன்றது கொஞ்ச நஞ்சமல்ல. நண்பர்கள் நாங்களும் நித்திலனின் உளமறிந்து முயன்றோம் அதை நீக்க. எனினும் தனது மனவேதனையில் இருந்து வெளியேறுவதற்கு எதிர்மறை ஆசைகள் பல எழுந்தன. இது இயல்பு. தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் பறிபோகிறது என்று எண்ணும்போது இளைஞர்களுக்கு எதிர்மறைச் சுதந்திரம் பற்றிய நாடல் ஏற்படுகிறது. இது உளவியல் சார்ந்த உண்மை.

தன் ஆசைகளை அவன் வேறொன்றின் மீது பதிலிடுகிறான். அதுதான் அதிக தரமுள்ள உந்துருளி - மோட்டார் சைக்கிள் ( சிறு வயதிலிருந்தே தனக்கு தரமான, சிறப்பான பொருள் வேண்டுமென்ற ஆசை இயல்பாக இருந்தது) என் ஆசை இதுவே. அவன் உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவுக்கு அடம்பிடிக்கிறான். சிலவேளை கெஞ்சுகிறான். உயிரையும் மாய்த்துக்கொள்ளும் அளவுக்கு அவனது ஆசை முறுக்கேறுகிறது. அதன் வெளிப்பாடுகள் பல வடிவங்களில் முரசறைகிறது. தாயும் தந்தையும் வெலவெலத்துப் போகின்றனர். பெத்தமனம் பித்தல்லவா? அவனுக்கு பல அறிவுரைகளுடன் வழங்கப்படுகிறது. அக்கணமே தாய் தந்தையின் கால்களில் விழுந்து வணங்குகிறான். அண்ணன்மாரைக் கட்டித் தழுவுகின்றான்.

அந்த உந்துருளிப் பயணமே அவனுக்கு இயமனாகியது. வீதியின் குறுக்கே சென்ற ஒருவனைக் காப்பாற்ற முயன்று தன்னுயிரைப் போக்கிக் கொண்டான். பெற்றவர்கள், உடன்பிறப்புக்கள், நண்பர்கள், அயலவர்கள் கதறி அழுது கண்ணீர்விட அவன் பயணித்துவிட்டான்.

இது ஒரு பாடம். ஒரு படிப்பு. அன்புக்கும் ஆசைக்கும் அடம்பிடிப்புக்குமுள்ள போராட்டம். பெற்றவர்கள் பிள்ளைகளின் ஆசைகளைப் பூர்த்தி செய்யவே எப்போதும் முயற்சிப்பர். இங்கும் அதுதான் நடந்தது. விபரீதம் இதனால்தான் நடந்ததா? அது எங்கும் நடக்கும். பலர் இதற்குப் பொறுப்பு.

நித்திலன் போய்விட்டான். நான் வைத்த நாம நித்திலன் நினைவில் நிற்கின்றான். அந்த முத்து நினைவுகளை விட்டு நீங்காது. விந்தன் மாமா என்று முகச்சிரிப்புடன் அழைப்பது இன்றும் கேட்கிறது. அன்பு முத்தே! என் மகள் உன் அக்கா மதுமிதா நெகிழ்ந்தாள், கரைந்தாள். உன் பயணம் கேட்டு உன் அன்ரி அனுஷியா தீராத மனவேதனை அடைந்தார். உன் நினைவுகள் நெஞ்சுக்குள் கல்லைப் புரட்டுகிறது.

**அன்புடன் விந்தன் மாமா**
( உதவிக்கல்விப் பணிப்பாளர் - முன்பள்ளி),
கல்வி வலயம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா என்கின்ற நித்திலனே!!

ஈராயிரம் யுகத்தின் தொடக்கமாய்
வன்னியின் மைந்தனாய்
உடன் பிறவாச் சகோதரனாய்
பூமித்தாயின் மடியில் உதித்தாய்
நிலா என்கின்ற நித்திலனே!

அன்னை மடிதவழ்ந்து நிமிர்ந்து
செல்ல நடைபயின்று
ஈரொன்பது வரை
நட்புக்கு இலக்கணமாய்
எம்மத்தியில் சிரிந்து மகிழ்ந்தாய்
நிலா என்கின்ற நித்திலனே!

இறுதியில்,
திகட்டி விட்டதோ? என்னவோ!
பைக்கிளில் ஸ்டார் பதித்து
ஆனி பதினான்கு விடைபெறும் வேளையில்
எமது மூளையின் நூறு பில்லியன்
நியுரோன்களும் “ஒரு நொடி”
கணத்தாக்கம் கடத்துவதை மறந்தன!
நிலா என்கின்ற நித்திலனே!

உன்னால்
வலி கொண்ட இதயம்
ஒருபோதும் வார்த்தைகள் தராது
அதனால்,
மௌனத்தை மட்டுமே
மொழியாகக் கொண்டிருக்கின்றேன்
நிலா என்கின்ற நித்திலனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசிப்பவர்கள் எல்லாம்
எம்மோடு நிலைத்து விட்டால்,
நினைவின் மொழியும், பிரிவின் வலியும்
தெரியாமல் போய்விடும்
என்பதற்காகவோ? என்னவோ!
எழுத்தறிவற்ற எத்தனையோ பேர்களில்
ஒருவனோ? எமனும் - எமது
அழகிய கவிதைப் புத்தகத்தைக்
கிழித்துப் போட்டுவிட்டான்!!
நிலா என்கின்ற நித்திலனே!

என்னதான் என்னை நானே
சமாதானப்படுத்தக் கொண்டாலும்
எனது சகோதரன் நிலாவின் மரணம்
மூளையுகத்தில் நிரந்தர வலியாகிப் போனது

உன் உடன்பிறவாச் சகோதரர்கள்
**கா. திவாகர், கா. சுதர்சன்**

| | | |
|---|---|---|
| **தானம்** | - | பிறர் கேட்குமுன்பே அவருக்கு நாமே சென்று நன்மை செய்வது. |
| **தைரியம்** | - | மனிதனை அணி செய்யும் குணங்களில் ஒன்று. |
| **தொண்டு** | - | இனிமை தரும் செயல் மனத்திருப்தியை ஏற்படுத்துவது. |
| **நகைச்சுவை** | - | மனித சமுதாயத்தில் நன்மை எல்லாம் ஒன்றாக இணைப்பது. |
| **நடத்தை** | - | ஒழுக்கமானதாயின் |
| **நல்லெண்ணம்** | - | தானத்தில் தலையாயது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமூகம் குணமாக்கப்படவேண்டியதா?

மனித பரிணாமம் மனிதனினாலேயே பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள், மனித மூளைய தொடர்பான உடற்கூற்றியல் விருத்தி சிந்தனைக்குரியதாகும். ஏனைய அங்கிகளுடன் (Organisms) ஒப்பிடுகையில், மனித மூளையின் பிரதான பாகங்களில் ஒன்றான மூளையம் (Cerebrum) பாரிய அளவில் விருத்தியடைந்துள்ளது. இக்கூர்ப்பின் காரணமாக, "கருத்துநிலைச் சிந்தனை" எமது மூளையத்தினால் மட்டுமே மேற்கொள்ளப்படுவது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

மேலும், மனிதன் ஒரு சமூகப்பிராணியாவான். இவனது வாழ்வியலுக்குரிய ஆட்சிநிரை ஒழுங்கமைப்பு மட்டங்கள் : தனியன் → குடும்பம் → சமூகம் என்றவாறு விரிகின்றது. மனிதனின் திறமைகளை உடல் வலிமை சார்ந்தது, பொது அறிவு சார்ந்தது, மனப்பான்மை சார்ந்தது மற்றும் சமூகம் சார்ந்தது என்று நான்காக வகைப்படுத்தலாம். மாணவர்களின் இத்திறமைகளை துல்லியமாகக் கண்டறிந்து அவர்களை நெறிப்படுத்துவதற்கு பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களான எமக்கும் இயலுமானதொன்றாகும். மனித விருத்திப்படிகளில், 12 வயது - 18 வயது வரையான மாணவர்களை அடக்கும் கட்டிளமைப்பருவத்தினர்கள், அவர்களது உடற்கூற்று ஓமோன்களின் மாற்றம் காரணமாக, பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். அத்துடன், சமூகத்தில் தமது நிலை பற்றித் தேடமுனையும் பருவமும் இதுவாகும். அப்போது தமது குடும்பம் மற்றும் சமூகம் பற்றிய நேர்ப்பெறுமானமுடைய சிந்தனைகள் உருவாவதற்குரிய வாழும் சூழல் இருப்பது அவசியம்.

உளவியல் ஆய்வாளர்களான பியாஜே, பிராய்ட், எறிக்சன் மற்றும் கோல்பேர்க் என்பவர்களும் மனித விருத்திப்படிகளின் முக்கிய நிலையான கட்டிளமைப்பருவத்தினரக்ளின் தேவைகளையும், அவர்களைக் கவனமாக கையாளவேண்டியதின் அவசியத்தையும் விளக்கியுள்ளார்கள். மனிதனில் நான்கு வகையான பெறுமானங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன : பொருள் சார்ந்த பெறுமானம் (Materialism), சாதனை சார்ந்த பெறுமானம் (Achievemnet), உறவு சார்ந்த பெறுமானம் (Relationship) மற்றும் ஆன்மீகம் சார்ந்த பெறுமானம் (Spiritualism) என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் கட்டிளமைப்பருவத்தினர்கள் பொருள் சார்ந்த மற்றும் சாதனை சார்ந்த பெறுமானங்களை மட்டும் கருத்திற்கொண்டு அவர்களது பெற்றோர்களினால் வளர்க்கப்படும்போது மிக விரைவில் அப்பிள்ளைகள் மனச்சோர்வடைவதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகம். இதனால் இப்பருவத்தினரக்ள் "வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாத இயைபாக்கப் பிறழ்வுக்கு" (Adjustment Disorder) உள்ளாகின்றனர்.

மேலும், எமது நாட்டைப் பொறுத்தவரையில் முக்கிய பொதுப்பரீட்சைகளான G.C.E. O/L மற்றும் C.C.E A/L என்பவற்றுக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் கட்டிளமைப்பருவ மாணவர்களேயாகும். இதன் காரணமாகவும், இவர்கள் தமது தாங்குதிறனை (Resilience) இழப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் யாழ் மண்ணில் அதிகம். தாங்குதிறன் இழப்பானது மேலே குறிப்பிட்ட இயைபாக்கப் பிறழ்வுக்கு (Adjustment Disorder) இட்டுச் செல்லும். படிப்பு மற்றும் அறிவு மட்டும் இருந்தால் போதாது. எமது பிள்ளைகளை மற்றும் மாணவர்களை நிகழ்காலத்திற்குத் தகுந்தாற்போல் விழிப்புணர்வுடையவர்களாக உருவாக்க வேண்டும். இவ்வுலகில் எல்லாமே அநித்தியம். ஆனால், மாற்றம் ஒன்றுதான் நித்தியமானது. எனவே, இயங்கும் சூழலுக்கேற்றவாறு பெற்றோர் மற்றும் ஆசிரியர்களான நாமும் மானிட ஒழுக்கப் பிறழ்வை ஏற்படுத்தாத மாற்றத்தை உள்வாங்கி மாணவர்களை வழிப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

நிறைவாக, கட்டிளமைப்பருவத்தினர்கள் தமது திறன்களை உணர்ந்து, சாதாரண வாழ்க்கையில் ஏற்படுகின்ற நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து தனக்கும் சமூகத்திற்கும் உபயோகமான ஒரு வாழ்க்கைக் கோலத்தைக் கொண்டிருப்பவர்களாக செப்பனிடப்படவேண்டும். இந்நிலைமை அவர்களை பாதகமான சூழ்நிலைகளிலும் மனநலம் உடையவர்களாக (resilience) வாழவழி செய்யும். மேலும் மற்றவர்களில் தங்கியிராது வாழும் தகைமை, நிறைகாண் மனப்பாங்கு, சுயகட்டுப்பாடு மற்றும் நகைச்சுவையுணர்வுடைய ஆரோக்கியமான மனிதனை உருவாக்கும் பாரிய பொறுப்பு எமது கைகளில் தற்போது உள்ளது என்பதனை எல்லோரும் சிந்தித்து செயற்படுத்துவோமா!

**நித்திலனின் பாசமிகு அண்ணா, அண்ணி**
**திரு.திருமதி மயூரன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவயதினரும் முகப்பருத்தாக்கமும்

எமது சருமத்தில் ஏற்படும் பிரச்சினைகளிலே மிகவும் தொந்தரவு தரக்கூடிய பிரச்சினை என்று சொன்னால், அது முகப்பருதான். பொதுவாக பதின்ம வயதில் (Teenage) அனேகமாக எல்லோருக்கும் வரக்கூடிய ஒரு பிரச்சினை இதுவாகும். அதிலும் பதின்ம வயதின் கடைசி வருடங்களில் இப் பிரச்சினை அதிகமாகவே இருக்கும். பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளுக்கு இதன் தாக்கம் அதிகமாகக் காணப்படும். ஆனால் சில பெண் பிள்ளைகளுக்கு மட்டும் இதன் தீவிரம் மிக அதிகமாக இருக்கும்.

தோலில் உள்ள எண்ணெய்ச் சுரப்பிகளில் ஏற்படும் மாற்றம் காரணமாக ஏற்படும் கொப்பளங்கள், தோலின் முடிச்சுக்கள் முகப்பரு என அழைக்கப்படுகிறது.

பொதுவாக முகப்பருக்கள் முகத்தில் மட்டும் தான் வரவேண்டும் என்பதில்லை. கழுத்து, முதுகு, தோள்பட்டை, மார்பின் மேற்பகுதி போன்ற இடங்களிலும் வரலாம்.

முகப்பரு வெடித்து, அதிலிருந்து வரும் ஒரு நீர்மம் அவ் இடங்களில் படிந்தால், அது இன்னும் நிலமையை மோசமாக்கிவிடும்.

பருவானது அரம்பத்தில் கருநிறக்குருணை (Blackhead) போலத் தோன்றும். அதனைப் பிதுக்கினால், வெள்ளை நிறத்தில் குருணைகள் (Whitehead) வெளிவரும். இச்சமயத்தில் தோலில் இயற்கையாகவே இருக்கின்ற பக்டீரியாக்கள் வீரியமடைந்து பருக்களை சீழ்ப்பிடிக்கவைக்கும். அழுக்குத்துண்டால் முகத்தைத் துடைத்தால் அல்லது அடிக்கடி முகத்தைக் கிள்ளினால் பருக்கள் சீழ்ப்பிடித்து, வீங்கிச் சிவந்து வலிக்கத்தொடங்கும். இதற்குச் சீழ்க்கட்டிப்பருக்கள் (Pustules) என்று பெயர். இவற்றுக்குச் சிகிச்சை பெறவில்லை என்றால், அவை உறைகட்டிகளாக (Cystic acnc) மாறிவிடும்.

சீழ்க்கட்டி அல்லது உறைகட்டி நிலையில் பருக்கள் இருந்தால், கரும்புள்ளி அல்லது குளிப்பள்ளம் விழுந்து தழும்பாகி முகத்தின் அழகைக் கெடுத்துவிடும். இளம் வயதினரை கவலைப்பட வைப்பது இந்தவகைத் தழும்புகள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் பருக்கள் வந்துவிட்டால் அது முகத்தின் பொலிவையே போக்கி விடும். இதனால் ஏற்படும் மனஉளைச்சலும், தாழ்வு மனப்பாங்கும் கடுமையானவை.

வெளியில் செல்லும் போதும், பொதுநிகழ்ச்சிகள், விசேஷசங்கள், உல்லாசப்பயணங்கள் திருமண நிகழ்வுகள் விருந்து விழாக்கள் என்பவற்றில் கலந்து கொள்ள பங்கேற்கும் போதும், புகைப்படங்கள் வீடியோப்படங்கள் எடுக்கும் போதும் முகப்பருக்கள் அதிக சங்கடங்களைத் தருகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் தலைவலி, உடல்வலி, சோர்வு, மனஅழுத்தம் போன்றவை ஏற்படுகிறது.

## கட்டுப்படுத்த என்ன வழி

இந்தப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காதா என்று இளம்வயதினர் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். கடைகளில் விற்கப்படும் இரசாயனம் கலந்த பொருட்களை பயன்படுத்துவதற்குப் பதிலாக இயற்கை மருத்துவத்தினை பயன்படுத்துவது சிறந்தது. புதினா, எலும்பிச்சை, தேன், வேப்பிலை, மஞ்சள், தயிர், கற்றாளை போன்ற வீட்டில் கிடைக்கும் இயற்கையான பொருட்களை முகத்தில் பயன்படுத்தினால் பக்கவிளைவுகளைத் தடுப்பது மட்டுமன்றி முகப்பரு வராமலும் காத்துக்கொள்ளலாம்.

எந்நேரமும் கண்ணாடியின் முன்நின்று பருக்களை விரல்களால் நோண்டுவதைக் கைவிடவேண்டும். பருக்களிலிருந்து வெள்ளை நிறக் குருணைகளைக் கிள்ளிப்,பிதுக்கி வெளியேற்றக்கூடாது. தேவைக்கு அதிகமாக முகத்தில் கிறீம் பூசக்கூடாது. அதிக இனிப்புப்பண்டங்களையும் கொழுப்புப்பண்டங்களையும் தவிர்க்கவேண்டும். நார்ச்சத்து நிறைந்த கீரை வகைகளையும், காய்கறிகள், பழங்களை என்பவற்றுயும் அதிகம் உட்கொள்ள வேண்டும். தினமும் மூன்று லீட்டர் தண்ணீர் குடிப்பது நன்று.

அடிக்கடி முகத்தை உரசிக் கழுவக்கூடாது. மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். சிகிச்சை முறைகளை அவரின் ஆலோசனை இல்லாமல் மாற்றவோ நிறுத்தவோ கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உளநலப்பிரச்சினைகள்

ஒருவருக்கு ஏற்படும் உடல் ரீதியான பாதிப்பு அவரின் உள்ளத்தையும் பாதிக்கிறது.

சுற்றியிருப்பவரிகளின் தவறான கணிப்பு, கருத்து, கேலி, கிண்டல்கள் இவர்களின் செயல்களைப்பற்றிய விமர்சனம் எல்லாம் அவர்களிடையே தாழ்வு மனப்பாங்கை ஏற்படுத்தி விடும். தாழ்வு மனப்பான்மையானது தன்னம்பிக்கையைக் குறைத்துவிடும். தன்னம்பிக்கை குறையும்போது மனம் பலவீனமடைகிறது இது ஆரோக்கியத்துக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்து விடுகிறது. மிக நெருக்கமானவர்களிடம் கூடப் பேச்சைக் குறைத்துக்கொள்வார்கள்.

தாழ்வு மனப்பான்மை இல்லாத மனிதர்கள் இல்லை என்றே கூறலாம். இந்த எதிர் மறை மனநிலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அதிலிருந்து மீண்டுவருவதுதான் முக்கியம்.

இந்தத்தாழ்வு மனப்பான்மை ஒருவரது கல்வியையும், அவரது செயலையும், உடல் நலனையும் பாதிக்கிறது. அதனால் .எம்மைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளுக்கு நாம் இடமளிக்கக்கூடாது.

தாழ்வுமனப்பான்மையிலிருந்து தப்பிக்க.எம்மைச் சீர்செய்ய., மற்றவருடன் மனம்விட்டுச் சகஜமாகப்பழக வேண்டும். நகைச்சுவையாகப் பேசலாம். நகைச்சுவையை ரசிக்கலாம். நல்ல புத்தகங்களை வாசிக்கலாம். மேலும் எம்மை நாமே பாராட்டவும் நேசிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

தன்னைப்பற்றிய ஒரு தவறான கணிப்பால் கவலை ஏற்படுகின்றது. நான் எதற்கும் தகுதியற்றவன், பயனற்றவன் என்ற உணர்வு நிலை அமைதியாகவும் ஆற்றலற்ற நிலையிலும் ஏனையோரிடமிருந்து விலகியிருக்கவும் விரும்புவர். அத்துடன் ஆழுகை மூலம் தமது மனநிலையை வெளிக்காட்டுவர். சிலர் மூர்க்கத்தனமாகவும் நடந்து கொள்வர்.

ஆகவே ஒருவர் தனது சுயகணிப்பை மேம்படுத்திக்கொள்ளவும் கவலைகளில் இருந்து விடுபட்டு, செயலூாக்கம் பெறவும் பொருத்தமான ஒருவரிடம் உளவளத்துணையைப் பெறுவது சிறந்தது. தியானம் மற்றும் யோகாசனப்பயிற்சிகளும் உணர்வுச்சமநிலையை ஏற்படுத்த உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை நாமே ஏற்றுகொண்டு வாழப்பழகினால் எல்லாமே நன்மையாகவே முடியும்.

வளரிளம்பருவத்தில் வரும் முகப்பருவின் தாக்கம் நித்திலனையும் பாதித்தது. வேதனையும் கவலையும் அவனைச் சூழ்ந்து கொண்டது. சுயம் பறிபோனது. தனிமை ஆட்கொண்டது. மனம் விட்டுப்போனது.


இருந்தும், விடாது, விடுபடத்துடித்த அவனுக்கு, பெற்றோரின் ஆதரவும் அரவணைப்பும், சகோதரர்களின் அன்பும் கை கொடுத்தது. நண்பர்கள் கரம் கோர்த்தனர்.

நித்திலன் - படிப்படியாய் மீண்டு எழும் வேளை, மீளாத்துயரில் எம்மை ஆழ்த்திச்சென்றான்.

அவன் போன்று அவதியுறும் மாணவர்களுக்கு இது சமர்ப்பணம்

அவன் நினைவுகளுடன் என்றும் நாம்...

**நா.கு. மகிழ்ச்சிகரன்**
**வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்**
**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மொழிகள்

**அன்பு** - வாழ்க்கையின் தலைசிறந்த இன்பம்

**அனுதாபம்** - மனித உள்ளத்தில் அன்புக்கு அடுத்தபடியான தெய்வீக உணர்ச்சி.

**இதயம்** - சிறந்த தர்க்கவியல் நிபுணன், சிறந்த போதகர்.

**இரக்கம்** - காதலுக்கு அடுத்தபடியாக மனித உள்ளத்தில் தோன்றக்கூடிய தெய்வீக உணர்ச்சி.

**ஒழுக்கம்** - நீண்டகாலம் தொடர்ந்து பயின்ற பழக்கம், மனிதனை மாற்றி அமைக்கும் விதி.

**கண்ணியம்** - மனித மனத்தைப் புண்படுத்தாமல் இருத்தல்.

**கருணை** - சமுதாயத்தை ஒன்றாய்ப் பிணைக்கும் தங்கச் சங்கிலி.

**காதல்** - வாழ்க்கை என்னும் மலரில் உள்ள தேன் உலகத்தின் இனிமையான கனவு, இரக்கம் மிகைப்பட்டு வளர்வதால் நிதானமோ அளவுகோலோ அறியாதது.

**குணம்** - உண்மையான செல்வம்

**சத்தியம்** - ஒழுக்கங்கள் எல்லாவற்றின் சாரம்.

**சமாதானம்** - மனிதனின் இயல்பான இனிய நிலை.

**சாந்தம்** - சகல நற்செயல்களுக்கும் அடிப்படை.

**சிரிப்பு** - உடலெங்கும் பரவும் இன்பத்தை ஓர் உறுப்பில் காட்டுவது, மன ஆரோக்கியத்தின் செயற்பாடு.

**சுறுசுறுப்பு** - எல்லாக் காரியங்களையும் எளிதாக்கும் சாதனம்.

**ஜீவகாருண்யம்**– சிறந்த தர்மம், நல்லொழுக்கத்தின் அடிப்படை.

**ஞானம்** - எல்லாச் செல்வங்களிலும் அழியாச் செல்வம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## தர்மானந்தசிவம் நித்திலன்

பிறப்பு : 2000.01.24 இறப்பு : 2019.06.14

**அன்பாலும் பண்பாலும் அனைவரையும்**
**அரவணைத்து நல் நட்போடு வாழ்ந்த நித்திலன்**
**உம் பசுமையான நினைவலைகள்**
**எமைவிட்டு அகலாது!**
**காலன் உமைக்கவர்ந்து சென்றாலும்**
**கனவிலும் நினைவிலும்**
**உம் பிரிவால் துயருறுகின்றோம்**

பிரிவால் துயருறும்
பல்மருத்துவ விஞ்ஞானபீட
மாணவர்கள்.
பேராதனை பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 | | 14 |
| - | | - |
| 01 | | 06 |
| - | | - |
| 2000 | | 2019 |



## அமரர்
## தர்மானந்தசிவம் நித்திலன்

விதியின் விளையாட்டில் விழும்
கண்ணீர் துளிகள்
கண்ணிமைக்கும் நேரத்தில் கதை முடிக்க
காத்திருந்த பகைவன் அவன்
நீ சிரித்தால் பலர் சிரிப்பார்
இன்று ஊரே அழுகின்றது
உன் சிரிப்பொலி எங்கே
நண்பனும் நீ தான்
நல்லவனும் நீ தான்
குடும்பத்தில் நீ இருந்தால் கூடி நிற்கும்
தோழர் எல்லாம் வீதியில் நீ நின்றால்
விழியில் ஒளிருமா உன் சிரிப்பு.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்
சந்திரோதயா சனசமூக நிலையம்
உருத்திரபுரம், கிளிநொச்சி.

சூரியன் பதிப்பகம் திருநகர் வீதி, கிளிநொச்சி. T.P - 0772882142



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
2000 - 01 - 24



விண்ணில்
2019 - 06 - 14

## எமது அன்பு நண்பன்

# அமரர். நித்திலன் தர்மானந்தசிவம்

ஆடிப் பாடித் திரிந்த - ஒரு நண்பன் இன்று
பேசாதிருப்பதேனோ !
உன் உயிர் பிரிந்த செய்தி கேட்டு
எம் இதயமும் ஒரு கணம் துடிக்க மறந்தது
சேர்ந்து நாம் சிரிக்கின்ற வேளையில்
கொடிய காலன் கவர்ந்தானோ !
பாதி வழியினில் உன் பயணம் முடிந்ததென்ன ?
சாய்ந்து அழ தோளும் இல்லை..
எம்மை தேற்றுவார் யாரும் இல்லையடா நண்பா !
நீயில்லா வெற்றிடங்கள் என்றும்
வெறுமை தானடா - நித்தி
எம் ஜீவன் ஓயும் வரை !
காலம் எல்லாம் காத்திருப்போம்
உன் வருகைக்காய்......!!!!

நண்பனின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்
உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உம் பிரிவால் துயருறும்.
**முதலி கோவில்**
**நண்பர்கள்.**

பராசக்தி பிறிண்டேர்ஸ் கொக்குவில் சந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

| தாயின் மடியில் | | மண்ணின் மடியில் |
|---|---|---|
| 2000 | | 2019 |
| ★ | | ★ |
| 01 | | 06 |
| ★ | | ★ |
| 24 | | 14 |



**எமது பாடசாலையின் ஆசிரியரும் ஆரம்பப் பிரிவுப் பகுதித் தலைவருமான திருமதி. மா.தர்மானந்தசிவம் அவர்களின் அன்பு மகன்**

## அமரர். தர்மானந்தசிவம் நித்திலன்

**அன்னாருக்கு எமது இதய அஞ்சலிகள்**

பூவென விரிந்த உள்ளம்
புன்னகை செழிக்கும் வதனம்
உம்மை நினைத்திட
நொருங்கிப் போனதே எங்கள் நெஞ்சம்

வாயினால் சொல்லிட வார்த்தைகளின்றியே
வந்த சோகம் நெஞ்சை பிழியுதே!
நெஞ்சமதில் நிறைந்திட்ட உம் நினைவுகள்
எம்மனதில் நீங்க மறுக்குமா.........

நேற்றுப் பார்த்த உம் முகம் இன்று காண
உம் கண்கள் பரிவித்துக் கலங்குதய்யா
எம் குமுறல் கேட்குமோ.... மனக்கண்ணில்
நிலைத்த நீர் - எம்
கண்ணில் எப்போதுதான் காண்போம்?

**அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

அன்னாரின் பிரிவுத் துயரில் வாடும்
**வித்தியாலய சமூகத்தினர்,**
**யா/பெரிய புலம் மகா வித்தியாலயம்.**

அச்சமைப்பு :- Fine Graaphics, 204A Ramanathan Road Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

தாயின் மடியில் 2000 ★ 01 ★ 24



மண்ணின் மடியில் 2019 ★ 06 ★ 14

**எமது ஆசிரியர் திருமதி. மா.தர்மானந்தசிவம்**
**அவர்களின் அன்பு மகன்**

## அமரர். தர்மானந்தசிவம் நித்திலன்

*அன்னாருக்கு எமது இதய அஞ்சலிகள்*

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயிரில் ஆழ்த்திச் சென்றீரே
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்
பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்

அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு
ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

அன்னாரின் பிரிவுத் துயரில் வாடும்
A/L 2019 கலைப்பிரிவு மாணவர்கள்
யா/பெரிய புலம் மகா வித்தியாலயம்.

அச்சமைப்பு :- Fine Graphics. 204A Ramanathan Road Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
24
01
2000



மறைவு
14
06
2019

அமரர்

## தருமானந்தசிவம் நித்திலன்

அவர்கள்

காற்றிலே கலந்த செய்தி
கண்களை ஈரமாக்கியதோ!
நேற்றுவரை முகம் மலர சிரித்தவர் நீ
சட்டெனப் போய் மறைந்துவிட்டாயே
நாள் குறித்தானோ காலன்
விதி என்ற பெயரில் - உனக்கு
நினைவுகள் முழுதும் மூச்சாய் நீள்கிறது
உம் உறவுகள் நாம்
உம்முடன் பழகிய நாட்கள் எல்லாம்
கழிந்துபோன கணங்கள்
கண்கலங்க வைக்கிறது எம்மை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஈர விழிகளுடன்....

17.06.2019

டாக்டர் க. திருலோகமூர்த்தி
குடும்பத்தினர் (கௌரி கிளினிக்,கிளிநொச்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர விழிகளுடன்...

தோற்றம் 24 ◈ 01 ◈ 2000



மறைவு 14 ◈ 06 ◈ 2019

அமரர்

**தருமானந்தசிவம் நித்திலன்**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்...

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

17.06.2019

சந்தோஷங்கள் அதிகம் தந்தாய் இன்று
பிரிவினால் மாறாத வலியையும் தந்தாய்
நீ இல்லாத போதும் இருந்திருக்கிறோம்
நீ வருவாய் என்று தெரிந்ததால் தானே
இன்று நீயே எம் நட்பில்
இல்லையென்றதும் ஏற்க
மறுக்கிறது எம் மனம்
உள்ளங்களால் ஒன்றாகி
உறவுகளில் கலந்திருக்கும்
உடன் பிறவா எம் உறவுக்கு
இன்றல்ல நாளையல்ல
என்றென்றும் வாழ்வும் உண்டு...!
உறவும் உண்டு...!

ஈர விழிகளுடன்......

டாக்டர் க. ஜெயச்சந்திரமூர்த்தி குடும்பத்தினர்,
ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் குடும்பத்தினர்,
டாக்டர் ஜெயக்குமார் சுகன்யா குடும்பத்தினர்.

Vista8Printers Te: 021 221 5488



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 – 01 – 2000 | 14 – 06 – 2019 |

## அமரர் . தர்மானந்தசிவம் நித்திலன்

கண்கள் பல உங்களைத் தேட
காணாமல் காலனுடன் சென்றதேனோ?
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன் முகமும் மறைந்ததேனோ?
கண்களெல்லாம் கண்ணீர் பொங்க
கலங்கவிட்டு எங்கு நீ சென்றாயடா?
அமைதியாய் மரணத் திரையில்
மௌனமாய் மறைந்ததேனோ?

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!*

கடைபெடியன்கள்
கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவில்கின்றோம்
# நன்றிகளை

எமது குடும்ப விளக்கு இவ்வுலகில் வாழ்ந்து
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில்கொண்ட எமது அன்புத் தெய்வம்
**அமரர் தர்மானந்தசிவம் நித்திலன்** அவர்களின்
மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து
எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும்,
தொலைபேசி மற்றும் பேஸ்புக் மூலமும்
அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
உற்றவிடத்து உதவிகள் பல புரிந்த
உற்றார், உறவினர், நண்பர்கள், குறிப்பாக நித்திலனின் நண்பர்கள்
அயலவர்கள் அனைவருக்கும் மற்றும்
இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட
அன்புள்ளங்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த
நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**


12, சேர்ச் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

91, உதயநகர், கிளிநொச்சி,
D8, உருத்திரபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Print @ Print Master. 021 205 3322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org